# பிணச்சீரமைப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் திருப்தியும், உளநன்னிலையும்

**ஜெபகீர்த்தனா, ம., கஜவிந்தன்.க.**
மெய்யியல்துறை (உளவியல்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
mjebakeerthana@gmail.com

*பிணச்சீரமைப்புத் தொழிலாளர்கள் சமூகத்திற்கு ஒரு அத்தியவசிய சேவையை வழங்குகின்றனர். அதாவது இறந்தவர்களின் உடலைப் பாதுகாத்து அடக்கம் தகனம் செய்யத் தயார் செய்கின்றார்கள். அதுமட்டுமன்றி இறந்த உடல் விரைவாக சிதைவதைத் தடுத்து அதனைப் பாதுகாக்க உதவுகின்றார்கள். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இத்தொழிலானது குறைந்த அளவிலான தொழிலாளர்களை உள்ளடக்கி காணப்படு கின்றது. இதற்குக் காரணம் இத்தொழில் பற்றிய தவறான புரிதல் ஆகும். இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் குறித்த தொழிலை மேற்கொள்பவர்களின் வாழ்க்கைத் திருப்தி உளநன்னிலையுடன் எத்தகைய தொடர்பைக் கொண்டுள்ளதென்பதை கண்டறிவது மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. பிணச்சீரமைப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் திருப்தி உயர்வானதாகக் காணப்படுகின்றதா?, பிணச்சீரமைப்புத் தொழிலாளர்களின் உளநன்னிலை உயர்வானதாகக் காணப்படுகின்றதா?, பிணச்சீரமைப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் திருப்திக்கும் உளநன்னிலைக்கும் இடையில் தொடர்புகள் காணப்படுகின்றதா? போன்ற வினாக்களின் ஊடாக பிணச்சீரமைப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் திருப்திக்கும் உளநன்னிலைக்கும் இடையில் எத்தகைய தொடர்புகள் காணப்படுகின்றது என்பதைக் கண்டறியும் நோக்கத்தின் அடிப்படையில் பிணச்சீரமைப்புத் தொழிலாளார்கள் பனிப்பந்து மாதிரியெடுப்புமுறை மூலம் தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்வுக்கு 60 மாதிரிகள் உள்ளடக்கப்பட்டனர். உள்ளடக்கப்படும் அனைவரிடமும் தரவுகள் சேகரிக்கப்பட்டு பண்புசார், அளவுசார் காரணிகள் ஆய்வு செய்யப்பட்டன. முதல்நிலைத் தரவுகளாக ஆய்வாளனால் பிணச்சீரமைப்புத் தொழிலாளரின் வாழ்க்கைத் திருப்தியை அளவிட "Satisfaction With Life Scale" பயன்படுத்தப்பட்டது. மேலும் பிணச்சீரமைப்புத் தொழிலாளர்களின் உளநன்னிலையை அளவிட ஆய்வாளானால். "Psychological Wellbeing Scale" பயன்படுத்தப்பட்டது. மாதிரிகளால் வழங்கப்பட்ட பதில்களின் அடிப்படையில் பகுப்பாய்வானது Statistical Package For The Social Science (SPSS-21) முறைமைகளினூடாக மேற்கொள்ளப்பட்டதுடன் அவை அட்டவணைகள், விளக்கப்படங்கள் மூலம் காட்சிப் படுத்தப்பட்டன. மேலும் Correlation, Anova, Standard Deviation, Mean, Descriptive Statistics, T-Test ஆகிய முறைகளின் வாயிலாக தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இத்தகைய தரவுப் பகுப்பாய்வு மற்றும் கருதுகோள் பகுப்பாய்வின் மூலம் திடமான முடிவுகள் கிடைக்கப் பெற்றன. அவற்றில் பிணச்சீரமைப்பு தொழிலாளர்கள் வாழ்க்கைத்திருப்தியை அதிகம் உணர்கிறார்கள் என்றும், பிணச்சீரமைப்பு தொழிலாளர்களின் உளநன்னிலை உயர்வாக காணப்படுகின்றது என்றும், பிணச்சீரமைப்பு தொழிலாளர்களின் பொருளாதார நிலை வாழ்கைத் திருப்தியில் அதிகளவு தொடர்புறுகின்றது என்றும், பிணச்சீரமைப்பு தொழிலாளர்களின் உளநன்னிலையில் வருமானம் தாக்கம் செலுத்துகின்றது என்றும்*